**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT MUNSIF JUDGE.**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**
**O.S. No.224/2018**

Deposition of the witness: DW2

Date: 20.04.2026

Solemnly affirmed by Mr. K. Bibin Raj Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | அர்ஷத்கான் |
| Father's Name | அப்துல் ரசாக் |
| Village | இடலாகுடி |
| Taluk | அகஸ்தீஸ்வரம் |
| Calling | வழக்கறிஞர் |
| Age | 33 |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஆவேன். 28.8.2021 அன்று நான் வழக்கு சொத்தை பார்வையிட்டு தாலுக் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தை 2.12.2021 அன்று தாக்கல் செய்தேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் அறிக்கை தாக்கல் செய்தபோது பிரதி தோன்றா தரப்பினராக இருந்தார் என்றால் சரி. பிரதியின் பெயர் லாசரஸ் ஆகும். வாதியின் பவர்தாரராக ரகு ஆனந்தராஜ் இருந்தார்.18.3.2020 ல் முதல்முதலில் வழக்கு சொத்தை வாதி கொடுத்த அவசர மெமோஅடிப்படையில் பார்வையிட்டேன். அந்த அவசர மெமோவில் பிரதி சேதபடுத்த போவதாக குறிப்பு இருந்ததன் அடிப்படையில் நான் பார்வையிட்டேன் என்றால் சரி. மெமோவில் குறிப்பிட்டுள்ள அறிகுறி தாவா சொத்தில் இருந்ததா என்றால் இல்லை வழக்கு சொத்தை யார் அடையாளம் காண்பித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. அப்போது வாதி வெளிநாட்டில் இருந்ததால் பவர்தாரர் மூலம் வழக்கை தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரி. வாதியை எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகமில்லை.

27.7.2020 தேதியில் அவசர மெமோ அ டிப்படையில் வழக்கு சொத்தை பார்வையிட்டுள்ளேன் என்றால் சரி. என்ன காரணமாக அவசர மெமோ என்றால்

சூழ்நிலைமாற்றம் என்று கூறபட்டுள்ளது. சூழ்நிலைமாற்றம் என்று குறிபிட்டு என்ன சொல்லபட்டது என்றால் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை. மெமோவில் குறிப்பிட்டுள்ளதுபோல் ஏதாவது சூழ்நிலைமாற்றத்தை வழக்கு சொத்தில் நான் கண்டேனா என்றால் எனக்கு புலப்படவில்லை. அதனால் என் அறிக்கையில் அவசர மெமோவில் கூறியுள்ள காரியங்கள் இல்லாததால் சொல்லவில்லை என்றால் சரி. பிரதிக்கு அனுப்பிய அறிவிப்பு எந்த முகவரிக்கு அனுப்பினேன் என்றால் யேசுவடியான் தெரு. கிறிஸ்துநகர் , வெட்டுர்ணிமடம் அஞ்சல் என்ன காரணத்தினால் திருப்பபட்டது என்றால் போதிய முகவரி இல்லை என்று முதல் அறிவிப்பு திருப்பபட்டது. முதல் அறிவிப்பில் வீட்டு எண் போடவில்லை என்றால் சரி. இரண்டாவது அறிவிப்பிலும் வீட்டு எண் போடவில்லை. அதே முகவரிக்கு தான் அனுப்பினேன். அதனை மறுக்கபட்டதாக திருப்பபட்டது.

எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தை அளந்தேன் என்றால் தாலுக் சர்வேயர் கொண்டு வந்த ரீசர்வே வரைபடத்தின் படி அளந்தேன். வழக்கு சொத்தின் கிரய ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. பிராதுடன் தாக்கல் செய்த ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. தற்போது என்னிடம் காட்டபடும் வா.சா.ஆ.2 ஆவணம் கிரயபத்திரம் என்றால் சரி. அதில் 6 சென்ட்க்கு சமமான 2613.6 ச.அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. சொத்தின் 4 பக்க அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. ஆணையர் வரைபடத்தில் 4 பக்க அளவுகள் சொல்லபட்டுள்ளது என்றால் சரி. தெற்கு 34 அடியும் வடக்கு 33 அடியும் மேற்கு 83 ½ அடியும் கிழக்கு 84 அடியும் வழக்கு எ பட்டிகை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. எ சொத்தின் சர்வே எண் .இ 1ல் 156.

எனது அறிக்கையில் எ பட்டிகை சொத்தின் பரப்பளவாக 6.04 சென்ட் காண்பித்துள்ளேன் என்றால் சரி. இந்த அளவானது வா.சா.ஆ.2 ஆவணம் கிரய பத்திரத்திற்கு எதிரானது என்றால் சரி. எனது அறிக்கையில் 1வது பாயிண்டில் 2 வது பாராவில் எ பட்டிகை சொத்தில் 1 வீடு இருப்பதாக காண்பித்துள்ளேன். அதன் 4 பக்கங்களும் சுமார் 6 அடி உயரத்திற்கு காம்பவுண்ட் சுவர் எழுப்பபட்டுள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் சரி. நான் தாக்கல் செய்த புகைபடங்களில் 2 வது புகைப்படத்தில் வாதி சொத்தின் மேற்கு பக்கத்தில் உள்ள தெருவில் இருந்து எடுக்கபட்ட புகைப்படம் என்றால் சரி.

வாதியின் மேற்குபக்க சுவரில் உள்ள அஸ்திபாரம் கருங்கல்லால் கட்டபட்டுள்ளது. கருங்கல்சுவர் 10 வது புகைப்படத்தில் உள்ளது. 11 வது புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள வாதியின் சுவர் தனியாக இருக்கிறது என்றால் பிரதியின் சுவர் தனியாக பெயிண்ட் அடிக்கபட்டுள்ளது. கருங்கல் சுவருக்கு மேல் சுவர்கட்டி பூசபட்டுள்ளது என்றால் சரி. அந்த சுவரானது கிழக்கு திசையில் செல்கிறது என்றாலும் அது பிஸ்கம் நிறத்தில் உள்ளது என்றாலும் அது 11 வது புகைபடத்தில் உள்ளது என்றாலும் சரி. வாதியின் எ பட்டிகை சொத்தையொட்டி பூசபட்ட சுவரானது தரையில் இருந்து எழுப்பபட்ட சுவர் உள்ளது என்றால் பூசப்பட்டிருப்பதால் சொல்லமுடியவில்லை. தனியாக எழுப்பபட்ட சுவரில் மின்இணைப்பு வைக்கபட்டுள்ளது என் றால் சரியல்ல . வாதியின் சுவரில் வைக்கபட்டுள்ளது. வாதியின் சுவரின் தெற்கு பக்கம் பிரதியின் சொத்து என்றால் சரி. ரோட்டில் இருந்து தனிசுவர் பிரதியின் சொத்தில் கட்டபட்டுள்ளது என்றால் பூசபட்ட சுவர் உள்ளது. அது அளவீட்டின் போது பி பட்டிகை சொத்தில் இருந்தது. எ பட்டிகை சொத்தில் உள்ள சுவரை ஒட்டி தெற்கு பக்கம் பிரதியின் சுவர் உள்ளது என்றால் பூசபட்ட நிற வேறுபாடுடன் கூடிய சுவர் உள்ளது.

பிரதியின் சுவரில் தான் மின் இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல பி பட்டிகை சொத்தில் தான் மின்இணைப்பு உள்ளது. வாதியின் எ பட்டிகை சொத்தையொட்டி கட்டபட்டுள்ள சுவரில் மின்இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல. ரோட்டில் இருந்து வெளிபக்க சுவரை 12 வது புகைபடத்தில் காட்டபட்டுள்ளது ஆனால் மின்இணைப்பு மீட்டரானது வாதியின் காம்பவுண்ட் சுவரில் இணைக்கபட்டுள்ளது. வாதியின் காம்பவுண்ட் சுவரில் தான் மின்இணைப்பு மீட்டர் இருப்பதாக அறிக்கையில் எங்கு சொல்லியுள்ளேன் என்றால் 2 வது பாயிண்டில் 2 வது பாராவில் 2 வது வரியில் சொல்லியுள்ளேன். நான் சொல்லும் பி பட்டிகை சுவர் என்பது பிரதியின் சுவர் என்றால் சரியல்ல பிரதியின் சுவரும் சேர்ந்த சுவராகும்.

12 வது புகைபடத்தில் வாதியின் சுவரும் பிரதியின் சுவரும் தனிதனியாக உள்ளது என்றால் மேற்கு பக்கசுவர் தனியாக உள்ளது. கருங்கல்லில் இருந்து கட்டபட்ட சுவர் எவ்வளவு உயரம் இருக்கும் என்றால் சரியாக அளவீடு தெரியவில்லை.உத்தேசமாக 4 அடி இருக்கும். மேற்குபக்க ரோட்டில் இருந்து கல்சுவருக்கு மேலாக 4 அடி தெற்கு பக்க சுவர் தனியாக தெரிகிறது. அந்த 4 அடி சுவரில் எந்த கட்டுமானமும் இல்லை என்றால் வாதியின்

சுவரையொட்டி பூசபட்ட சுவர் வெள்ளைநிறம் அடிக்கபட்டது வாதியின் சுவரிலும் வெள்ளைநிறம்அடிக்கபட்டுள்ளது 13 வது புகைபடத்தில் தெரிகிறது. மேற்கு பக்கம் வாதியின் சுவரைதொட்டு பிரதியின் சுவர் உள்ளது என்றாலும் அது தனிதனி கட்டுமானம் என்றாலும் சரியல்ல.

எ பட்டிகை சொத்தின் 4 பக்க காம்பவுண்ட் சுவருக்கு உள்ளாக எவ்வளவு பரப்பளவு இருந்தது என்று அளந்தேனா என்றால் இல்லை எ பட்டிகை சொத்தை மொத்தமாக அளவீடு செய்தேன். வா.சா.ஆ.2 ஆவண கிரயபத்திரத்தின் படி அளந்தால் நான் சொல்லும் பி பட்டிகை சொத்தின் ஆக்கிரமிப்பாக நான் குறிப்பிட்டுள்ள விவரம் தவறானது என்றால் சரியல்ல. 6.04 + 0.214 இரண்டையும் சேர்த்தால் கிரய அளவை விட அதிகமாக வரும் என்றால் சரியல்ல. 6.04 அளவிற்கு உள்ளாக 0.214 பகுதி உள்ளது. என் வரைபடத்தில் DC என்பது வாதி சொத்தையும் பிரதி சொத்தையும் பிரிக்கும்கோடு என்றால் சரி. தவறான ஆவணத்தின் படி அளந்து பிரதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணத்துடன் வாதிக்கு ஆதரவாக அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது அறிக்கையில் 3,4 வது பாயிண்டில் வாதியின் வீடு DC கோட்டை ஒட்டி இல்லை என்றால்சரி. வாதியின் வீட்டில் உள்ள விரிசலை குறிப்பிட வாதி கேட்டிருப்பது தவறானது என்றால் சரியல்ல. எந்த விரிசலும் இல்லை என்று நான் குறிப்பிட்டுள்ளேன்.

<u>வாதிதரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் அனைத்தும் மேற்கு பக்க தெருவில் உள்ள புகைப்படங்கள் என்றால் 6 வது புகைப்படமானது வாதி வீட்டின் உள்பக்கம் எடுத்தது மற்ற புகைபடங்கள் அனைத்தும் மேற்கு மற்றும் வடக்கு பக்கத்தில் இருந்து எடுத்த புகைப்படங்கள் ஆகும். 11 வது புகைப்படத்தில் மேற்கு பக்கத்தில் 2 சுவர்கள் தனித்தனியாக இருப்பதாக துலங்கவில்லை என்றால் சரியல்ல, அந்த புகைபடத்தில் தெற்கு பக்கமுள்ள சுவர்கள் துலங்கவில்லை. 12 வது புகைப்படத்தில் மேற்கு பக்கத்தில் இருந்து தெற்கு பக்க 2 சுவர்கள் தனித்தனியாக இருப்பதாக துலங்கவில்லை என்றால் சரி, அந்த புகைபடமானது மின்இணைப்பை காட்ட போடப்பட்டது. 16 வது புகைபடம் மின்இணைப்பு காட்டுவதற்காக போடபட்டது என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள எந்த புகைப்படத்திலும் பி பட்டிகை சொத்தையொட்டி 3 அடி உயரத்தில் ஏதாவது காம்பவுண்ட் சுவர் இருப்பதாக காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

ABCD என்ற 6.04 சென்ட் இடமானது ஆக்கிரமிப்பு பகுதியான 0.214 பகுதியும் சேர்ந்த இடம் என்றால் சரி. வழக்கு சொத்தை பார்வையிட்ட போது பிரதியின் வீட்டை பார்வையிட்டேன் பிரதியின் வீடு கான்கிரீட் வீடு. அதன் பரப்பளவு தெரியாது.